தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை,(ஆலையம்மன் கோவில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண். 24347590

**ஆணை நாள் – 05.11.2020**

**முன்னிலை**

**திரு. சு.முத்துராஜ், பி.ஏ., பி.எல்.,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 12676/D/2019**

_திரு D. ரமேஷ் தன்ராஜ் ... மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்,
மாவட்டக்கல்வி அலுவலர்,
மாவட்டக்கல்வி அலுவலகம்,
பொன்னேரி, திருவள்ளூர் மாவட்டம். ... பொது அதிகார அமைப்பு

பார்வை:

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1)-ன்கீழ் மனு செய்த நாள் | 23.09.2019 |
| மனுதாரரின் மனு பிரிவு 6(3)-ன்கீழ் மாற்றப்பட்ட நாள் | 25.11.2019 |
| பொதுத் தகவல் அலுவலர் பதில் அளித்த நாள் | 25.09.2019 |
| பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 18.11.2019 |
| பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 16.12.2019 |

****

**ஆணை**

தமிழ்நாடு அரசால் COVID-19 காரணமாக ஊரடங்கு (LOCK DOWN) பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில், தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் வைத்து நேரடியாக விசாரணை செய்ய இயலாததால், இன்று (05.11.2020) தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இந்த விசாரணையில் மனுதாரர் திரு. D. ரமேஷ் தன்ராஜ் மற்றும் பொதுத் தகவல் அலுவலர் திரு. ரவி, மாவட்டக்கல்வி அலுவலர், பொன்னேரி, திருவள்ளூர் மாவட்டம் ஆகியோர் பங்கேற்றனர்.

2. மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ் திருவள்ளூர் மாவட்டம், மாவட்டக்கல்வி அலுவலகப் பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பியுள்ள மனுவில், திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் இயங்கி கொண்டிருக்கும் பெஸ்ட் நர்சரி பிரைமரிப் பள்ளியின் மொத்த நிலப்பரப்பு மற்றும் பள்ளிகளுக்கு அரசு விதித்த விதிகளின்படி எத்தனை ஏக்கர் நிலப்பரப்பு கொண்டதாக இருக்க வேண்டும் என்பது குறித்த முழு விவரம், மேற்படி பள்ளியில் கழிவறைகள், சிறுநீர் கழிப்பறை மற்றும் குடிநீர் குழாய்கள் எவ்வளவு உள்ளது என்பது குறித்த விவரம், உள்ளிட்ட விவரங்களை மொத்தம் ஐந்து இனங்களில் ஆவண நகல்கள் மற்றும் தகவல்களாக வழங்கக் கோரியுள்ளார்.

3. மனுதாரர் மேற்குறிப்பிட்டவாறு தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1) மற்றும் 19(3)-ன் கீழான தனது முதல் மற்றும் இரண்டாவது மேல்முறையீட்டு மனுக்களைத் தாக்கல் செய்துள்ளார். மனுதாரரின் இரண்டாவது மேல்முறையீட்டு மனு இன்று (05.11.2020) தொலைபேசி வாயிலான விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய தொலைபேசி வாயிலான விசாரணையில் பங்கேற்ற பொதுத் தகவல் அலுவலர் 25.09.2019 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு ஏற்கனவே தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார். இன்றைய விசாரணையில் பங்கேற்ற மனுதாரர் தனக்கு முழுமையான தகவல்கள் வழங்கப்படவில்லை என்று தெரிவித்தார், மேலும், தான் குறிப்பிட்டுக் கோரிய தனியார் பள்ளி கட்டமைப்பதற்கான இடம் பேரூராட்சியாக இருக்கும்பட்சத்தில், ஒரு ஏக்கர் நிலப்பரப்பு கொண்டதாக இருக்க வேண்டும், மேற்கண்ட பள்ளி நில அளவு குறைவாக இருப்பதால், நிலம் சம்பந்தமான ஆவணங்கள் தர மறுக்கப்படுகிறது. எனவே, பொன்னேரி பெஸ்ட் நர்சரி பிரைமரி பள்ளியின் நிலம் சம்பந்தமான ஆவணங்களை தகவல்களாக பெற்றுத் தருமாறு கோரினார்.

5. இன்றைய தொலைபேசி வாயிலான விசாரணையின் முடிவில், மனுதாரர் தனது மனுவில் கோரிய தகவல்கள் தொடர்பாக உரிய தகவலை மனுதாரருக்கு உடனடியாக வழங்க திருவள்ளூர் மாவட்டம், மாவட்டக்கல்வி அலுவலகப் பொதுத் தகவல் அலுவலருக்கு உத்திரவிடப்பட்டு, இம்மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணையை இவ்வாணையம் இத்துடன் முடித்துக் கொள்கிறது.

**ஓம்/- (சு. முத்துராஜ்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 12676/D/2019</u>**

பெறுநர்

**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**

பொதுத் தகவல் அலுவலர் / மாவட்டக்கல்வி அலுவலர்,
மாவட்டக்கல்வி அலுவலகம்,
பொன்னேரி, திருவள்ளூர் மாவட்டம்.

**<u>மனுதாரர்:-</u>**

திரு D. ரமேஷ் தன்ராஜ்,
எண்.23, ராமசாமி தெரு,
திருவாயற்பாடி, பொன்னேரி,
திருவள்ளூர் மாவட்டம்.

Copy to: File
DGPC 10.11.2020